# சோ.தர்மனின் சூல் புதினத்தில் வழிபாட்டு முறைகள்

**திருமதி மு.கீதா**
**உதவிப்பேராசிரியர், துறைத்தலைவர்**
**தமிழ்த்துறை, எஸ்.எஸ்.எம்.கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**
**திண்டுக்கல். mgeethaasundar@gmail.com**

**68**

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதர்கள் தங்கள் வாழ்நாளில் ஏற்படுகின்ற மிகப்பெரிய துன்பங்களிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளவும் வாழ்வில் சோதனைகளும் வேதனைகளும் வராமல் தங்களைக் காத்துக்கொள்ளவும் தெய்வங்களை வழிபட்டனர். இறைவனை அடைய மனிதன் அணுகும் முறைகளில் வழிபாடும் ஒன்றாகும். மனிதன் தனித்துத் தன் கடவுளுடன் செய்துகொள்ளும் உறவு வெளியிடு, தெய்வத்துடன் நெருங்கி இருப்பதனால் கிடைக்கும் மகிழ்ச்சி, தெய்வ அருளால் வாழ்க்கையில் பெறப்போகும் நல்வாழ்வுக்காக வழிபாடு செய்கின்றனர். மனிதன் தெய்வங்களை அடங்க அவற்றைத் திருப்திபடுத்தும் முயற்சியின் விளைவே வழிபாடாகும். இயற்கையோடு இயைந்து தன் தேவைகளைப் பெற்ற மனிதன் விழிப்புணர்வு பெற்றதும் இயற்கையை உற்றுநோக்கி வாழ்த்த தலைப்பட்டான். அந்த இயற்கை பொய்த்த போது கலங்கினான் தனக்கு இயற்கையால் வரும் பாதிப்பையும் இழப்பையும் அறிந்து ஒன்றுகூடிப் போராடினான். தன் ஆற்றலுக்கு மீறிய ஏதோ ஒரு போராற்றல் தன்னை ஆட்டுவிப்பதை உணர்வு மூலமாக அறிந்த மனிதன் அதிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள அந்தப் பேராற்றலிடம் அடைக்கலம் புகுந்தான். இதுவே வழிபாட்டிற்கு வழிவகுத்தது. அத்தகைய வழிபாட்டின் வளர்நிலையாக உருளைக்குடி மனிதர்கள் தங்களுக்கு விருப்பமான தெய்வத்திற்கு உருவங்களை அமைத்து வழிபட்டனர். இத்தெய்வங்கள் நாட்டுப்புற மக்களால் அடையாளப்படுத்தப்படுகின்றன. சூல் புதினத்தில் இடம்பெறும் தெய்வங்களான பெண் தெய்வங்கள், காவல் தெய்வங்கள் என இருவகையாகப் பிரித்துப்பார்க்களாம். இத்தெய்வங்களை மையப்படுத்தி அறம் கட்டமைக்கப்பட்டுள்ளது. உருளைக்குடி மக்களின் வாழ்வியலோடு தெய்வங்கள் பின்னிப்பிணைந்துள்ளன. இத்தெய்வங்கள் மக்களின் நடடிக்கைகளைக் கட்டுப்படுத்த கூடியவைகளாக விளங்குகின்றன. மக்கள் தான் இத்தெய்வங்களை உருவாக்கினர் என்றாலும் மக்களை வழி நடத்தும் பொறுப்பு இத்தெய்வங்களுக்கே உரியதாகின்றது. இத்தெய்வங்கள் உருவான கதையைக் உருளைக்குடி மண்ணிற்குரிய சூழலோடு ஆசிரியர் பதிவுசெய்கிறார். தெய்வங்களையும் தெய்வங்கள் உருவான விதத்தையும் மிகத் தெளிவாக இக்கட்டுரையில் விளக்கி விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. அத்தெய்வங்களான சக்கம்மா, கோமதி அம்மன், அய்யனார், கள்ளன் சாமி, உளிக்கருப்பன் சாமி, கட்டக்கருப்பன் சாமி, குரவன் சாமி, கொடிக்காப்பிள்ளை சாமி, இருளப்பன் சாமி போன்ற தெய்வங்களைச் சோ.தர்மன் சூல் புதினத்தில் பதிவுசெய்துள்ளார். தெய்வங்களுக்குக் காரணக் காரியத்தோடு கதைகள் உருவாக்கப்படுகிறது. இக்கட்டுரையானது தெய்வளுக்கும் மக்களுக்கும் உள்ள

உறவு பற்றியும் தெய்வகள் உருவாகும் முறை பற்றியும் வழிபாட்டுமுறை பற்றியும் குறித்தும் பேசுகிறது.

**முன்னுரை**

நாட்டுப்புற மக்களின் மரபோடு நீங்காத உறவு கொண்டு அமைந்துள்ள சிறுதெய்வ வழிபாடுகளில் தெய்வங்களை அலங்கரித்தல், பூசை செய்தல், படையல் போடுதல், மாவிளக்குப் போடுதல், நேர்த்திக்கடன் செலுத்துதல், கரகம் எடுத்தல், பூக்குழி மிதித்தல், பால் குடம் எடுத்தல், கெடா வெட்டுதல் போன்ற வெவ்வேறு விதமான வழிபாட்டு முறைகள் அமைந்துள்ளன. மக்கள் தெய்வங்களுக்குச் செய்யும் சடங்குகளும் வழிபாட்டு நெறிகளும் வழிபாட்டு முறைகள் எனப்படுகிறன. சிறு தெய்வ வழிபாடுகள் காலங் காலமாகச் செய்யப்பட்டு வரும் முறையைப் பின்பற்றிக் கிராம மக்கள் விரும்பிய வண்ணம் நிகழ்த்தப்படுகின்றன. சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் தெய்வங்களுக்குத் தகுந்தவாறு வேறுபடும். ஒவ்வொரு தெய்வமும் தனக்கெனத் தனித்த வழிபாட்டு முறைகளைக் கொண்டிருக்கும். தமிழர்களின் வாழ்வில் ஒன்றாக விளங்குவது இலக்கியம். இவ்விலக்கியங்களில் புதின இலக்கியம் மிகவும் முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. புதின இலக்கியத்தில் நாட்டுப்புற மக்களின் வழக்காறுகளைப் பயன்படுத்தி இலக்கியம் படைக்கின்றன. அவ்வகையில் சூல் புதினத்தில் இடம்பெற்றுள்ள தெய்வங்களும் வழிபாட்டு முறைகள் பற்றி இக்கட்டுரை அமைகிறது.

**சூல் புதினத்தின் கதைச்சுருக்கம்**

சோ.தர்மனின் சூல் புதினம் உருளைக்குடி மக்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. உருளைக்குடி மக்களின் குடும்ப, விவசாய, நீர்ப்பண்பாடு சார்ந்த வரலாற்றுப் பதிவுகளையும் மாற்றங்களையும் பதிவுசெய்கிறது. சோ.தர்மன் இலக்கியத்தின் தேர்ந்த கதை சொல்லியான இவர், வட்டார மண்ணின் வாழ்வை எழுதியவர்களில் தனித்துமாகத் திகழ்கிறார். வட்டார மண்ணில் ஏற்பட்ட மாற்றத்தைப் பண்பாட்டு வீழ்ச்சியின் பெரும் கவலையாகப் பார்க்கிறார். இதனையே தன் படைப்புகளில் படைத்துக்காட்டுகிறார். அதேவேளையில் விவசாயத்தோடும் தங்கள் வாழ்க்கையைப் பிணைத்துக்கொண்ட மக்களைப் பற்றி நுட்பமாகப் பேசுகிறது. சூல் புதினத்தில் பல்வேறு பின்புலத்தைத் தன்னுள் கொண்டு திகழ்கிறது. சூல் புதினத்தில் விவசாயமும் விவசாயம் செய்யக்கூடிய முறையும் மக்கள் மண்மீது கொண்டுள்ள பற்றும் முன்னிலைப்படுத்தப்படுகிறது. விவசாயத்திற்கு ஆதாரமான நீர் மேலாண்மைப் பற்றியும் நீரைக் கையாளும் மக்களைப் பற்றியும் விவசாயம் செய்யும் அறிவியல் தொழில் நுட்பத்தினைப் பற்றியும் படைப்பில் நீருக்கும் மக்களுக்குமான உறவையும் நீரின்றி விவசாயம் இல்லை எனும் கருத்தையும் நீரை ஒரு சமூகம் கையாளும் விதத்தையும் பதிவுசெய்துள்ளார்.

**வழிபாடு - விளக்கம்**

வழிபாடு என்னும் சொல்லிற்கு “வழியில் செல்லுகை, பின்பற்றுகை, வண்ணம், பூசனை, வழக்கம், சமயக் கோட்பாடு” என்னும் பொருள்களைத் தமிழகராதி குறிப்பிடுகின்றது (கழகத் தமிழகராதி, 1976, ப.786). “மனிதன் கூட்டமாக இணைந்து நிலையாக ஓரிடத்தில் வாழ முனைந்தபோது சிந்திக்கத் தொடங்கியதன் விளையே வழிபாடு” என்று கா.கனகராசு கூறுகின்றார்

(ப.கனகராசு, 2004, ப.145). "பண்டைய மக்கட் சமுதாயத்தினர் தரு வளத்தையும் பயிர் வளத்தையும் பெறுவதற்காக மந்திரங்களைப் பயன்படுத்தினர். அதன் தர்க்க ரீதியான முடிவாக வழிபாடு தோன்றியது" என்று க.கைலாசபதி குறிப்பிடுகின்றார். (க.கைலாசபதி, 1978, ப.80) உணர்வின் வழிகாய ஆதிமக்கள் தங்களைச் சுற்றிலும் நிகழ்ந்த நிகழ்வுகளால் அச்சம் கொண்டிருந்ததால் இயற்கையாக எழுந்த எண்ணங்களின் மேலீட்டால் அவற்றையே வணங்கத் தலைப்பட்டதன் விளைவே வழிபாடு தோன்றியது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில், "வழிபடு கிழமை" (தொல்,பொருள்,நூ.1057) என்ற சொற்சொடர்கள் பயின்று வருகின்றன.

**வழிபாட்டின் தோற்றப் பின்னணி**

ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதன் உயிருள்ள, உயிரற்ற, மிகப்பெரிய, பேரழிவைத் தரக்கூடிய எந்தெந்தப் பொருள்களைப் பயத்துடன் கண்டானோ அவற்றையெல்லாம் வழிபடத் தொடங்கினான் என்பது நாட்டுப்புற தெய்வங்களின் தோற்றக் கோட்பாடாக இருக்கின்றது. நாட்டுப்புற தெய்வ வழிபாடுகளில் காத்து, கருப்பு என்று கூறப்படும் காற்று, இருள் மீதான பயம் தான் தெய்வ வழிபாட்டின் முன்னோடியாக இருந்திருக்கலாம். "பிற்காலத்தில் இந்தக் கோரக் கடவுள்களின் பெயரைத் தங்கள் வாரிசுகளுக்குச் சூட்டினால் அக்கடவுளால் ஆபத்து நேராது என்று கருதினர். காற்றுக் கடவுளைத் திருப்திப்படுத்த காத்தாயி, காத்தப்பன், காத்தவராயன், காத்தவீரி என்று தங்கள் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டினர். இருள் கடவுளைத் திருப்திப்படுத்த கருப்பன், காப்பாயி, கருப்பச்சாமி, இருளன், இருளாயி என்று தங்கள் வாரிசுகளுக்குப் பெயர் சூட்டினர்" (பெருமாள்.எஸ்.ஏ, 2011). அது இன்று வரை மரபாகத் தொடர்கிறது.

**சிறுத்தெய்வம் பெரும்தெய்வம் வழிபாடுகள்**

வழிபாடுகள் பலவிதம் என்றாலும், தமிழர்கள் 'பெருந்தெய்வ வழிபாடு', 'சிறுதெய்வ வழிபாடு' என்று கடவுள் நெறியை இரண்டாகப் பாகுபடுத்தினர். பெருந்தெய்வ வழிபாடும் சிறுதெய்வ வழிபாடும் பழந்தமிழர் பண்பாடு என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

**"ஈண்டு பெருந் தெய்வத்து,**
**யாண்டு பல கழிந்தன" (நற்.315)**

**"நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து**
**உகுபலி அருந்திய தொருவிறற் காக்கை" (நற்.343)**

என்ற வரிகள் சிறுதெய்வ வழிபாட்டையும் இயற்கை வழிபாடே பழந்தமிழர் வழிபாடு என்பதன் எச்சத்தையும் விளம்புகின்றன.

**பெண்தெய்வ வழிபாடுகள்**

தாய் தெய்வங்களாக, கன்னி தெய்வங்களாக வணங்கப்படும் தெய்வங்களில் பலரும் இச்சமூகத்தின் ஒடுக்குமுறைக்கு ஏதோ ஒரு வகையில் ஆட்பட்டவர்களாக இருக்கின்றனர். அவர்களின் இறப்பு குறித்த அச்சமே அவர்களை தெய்வமாக்கி நம்மை வணங்கச் செய்திருக்கின்றது. சில தெய்வங்கள் வாழ்வில் வளத்தைக் கொண்டுவருபவை, வழிகாட்டுபவை என்று நம்பப்படுகின்றன. திருமணம், குழந்தைப்பேறு, வளமான வாழ்வு, உடல் நலம் என்று பல்வேறு வேண்டுதல்களை மனதில்

கொண்டு வழிபாடுகளைச் செய்துவருகின்றன.

**சக்கம்மா வழிபாடு**

உருளைக்குடி சக்கம்மா கோவிலை பிடிமண் கொண்டு உருவாக்கினர். பிடிமண் என்பது குலதெய்வ கோவிலிருந்து எடுக்கப்படும் மண். அம்மண்ணைக் கொண்டு தாங்கள் தங்கும் இடத்தில் கோவில்கட்டி வழிபடுவர். அவ்வகையில் உருளைக்குடியில் மேகலகுடி மக்கள் பாஞ்சாலக் குறிச்சி குலதெய்வ கோவில் பிடிமண் கொண்டு, தற்போது வசிக்கும் உருளைக்குடியில் பீடம் அமைத்துச் சக்கம்மா கோயிலை உருவாக்கினர். சக்கம்மாக்கு ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் வைத்து வழிபடுவர். பொங்கல் வைத்து வழிபாடும் நடைபெறும் அன்று இரவு முழுவதும் ஒத்த உறுமிச் சத்தமும் சேகண்டியடியும் அடித்துக்கொண்டு வழிபடுவர்.

**கோமதி அம்மன் வழிபாடு**

அச்சத்தின் தொடக்கமாகவும் அதனால் ஏற்படும் நம்பிக்கையே வழிபாட்டிற்கு வழிவகுத்தது என்பதற்கு ஏற்ப சூல் புதினத்தின் பதிவு குறிப்பிடத்தக்கது. நீர்ப்பாய்ச்சி இரவு நேரங்களில் கண்மாய்த் தண்ணீரை திரந்துவிடும் தொழில் செய்பவன். இதனால் இரவு நேரத்தில் பாம்பு, தேள், பூரான் போன்ற உயிரினங்களால் பாதிப்பு ஏற்படாமல் இருக்கச் சங்கரன் கோவிலுக்குப் பாம்பு, தேள், பூரான் போன்ற உருவங்களை வாங்கிக் கோமதி அம்மனுக்கு வைத்து வழிபடுவார். இவரைப் போல் நிலம் உடையவர்களும் உருவங்களை வைத்து வழிபடுவர். இப்படி வழிபடுதன் மூலம் அவ்வுயிரினங்களால் தங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என நம்பிக்கை கொண்டு வழிபட்டு வருகின்றன.

**காவல் தெய்வங்கள்**

ஒரு குறிப்பிட்ட கிராமத்தின் எல்லைக்குள் வேற்று மனிதர்களாலும் தீய ஆவிகளாலும் எந்தத் தீங்கும் நேர்ந்து விடக்கூடாது என்ற நோக்கில் வழிபடப்படும் தெய்வமே காவல் தெய்வம் (அ) எல்லை தெய்வம் எனக் கிராம மக்களால் அழைக்கப்படுகின்றது. “கிராம தெய்வதைப் போன்றே ஊரின் எல்லையிலிருந்து ஊர் எல்லையைத் தாண்டியுள்ள வேற்றார்களால் ஊருக்கு எந்தத் தீங்கும் வந்துவிடாமல் காக்கும் தெய்வம் எல்லை தெய்வம் (அ) காவல் தெய்வம்” (சற்குணவதி, 2010, ப.100) என்று கூறப்படுகின்றது. பெரும்பாலான ஊர்களில் காவல் தெய்வங்கள் குடி கொண்டதற்கு ஒரு தென்ம கதை உண்டு. கதைகள் பெரும்பாலும் யாரேனும் ஒரு தனி நபர் (ஆண் அல்லது பெண்) வஞ்சிக்கப்பட்ட தாகவோ அல்லது ஒரு குடும்பத்தினர் பிறரால் துன்புறுத்த பட்டதாகவோ இருக்கும். பின்னாளில் அந்தத் தனி நபரோ அல்லது குடும்பமோ தெய்வமாகி, பிறரால் வழிபடுவது வழக்கம். இப்படிப் பல கிராமங்களில் குடிகொண்டிருக்கும் காவல் தெய்வங்களை மக்கள் வழிபட்டு வருகின்றன. அவ்வகையில் சூல் புதினத்தில் இடம்பெறும் காவல் தெய்வ வழிபாடுகள் பற்றிப் பின்வருமாறு பார்க்கலாம்.

**அய்யனார் சாமி வழிபாடு**

சூல் புதினத்தில் ஊர் மக்கள் அனைவரும் போற்றக்கூடிய கடவுளாகவும் ஊருக்கும் மக்களுக்கும் காவல் தெய்வமாகவும் விளங்குவது அய்யனார் சாமி. கண்மாய்க் கரையைக் காவல் காத்து நிற்பதால் ‘கண்மாய்கரை அய்யனார்’ என்றே அழைக்கப்படுகிறது. அய்யனார் சாமி

கண்மாய்கரைக்கு மட்டும் காவல் அல்ல. கண்மாயில் உயிர் வாழக்கூடிய அனைத்து உயிர்களுக்கம் காவல் நிற்பவர். அய்யனார் தெய்வத்தைத் தொடர்ந்து உருளைக்குடி ஊரில் பல்வேறு துணைத் தெய்வங்கள் உருவாக்கிக்கொண்டே இருக்கின்றன. உருளைக்குடியில் மட்டும் காவல் தெய்வம் அய்யனார் இல்லை. தமிழகத்தின் அனைத்து ஊர்களின் எல்லைத் தெய்வமாகவும் ஊர்த் தெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் அய்யனார் சாமி விளங்குகிறார் என்பதை வரலாறு சுட்டிக்காட்டுகிறது. உருளைக்குடி மக்கள் அய்யனாரை வழிபட்ட பின் வயலில் நெல்லை நடுவர். நெல் நடவு தொடங்கும் முன் அய்யனார் கோவிலில் பொங்கல் வைத்து வழிபட்டப் பின் நாற்று நடுவர். தங்களுக்கு மட்டுமல்லது தங்கள் வயலுக்கும் காவல் தெய்வமாக அய்யனாரை வழிபடுகின்றனர்.

**கருப்பன் சாமி வழிபாடு**

கிராமிய வழக்கில் கருப்பர், கருப்பணன், முனியாண்டி சடையாண்டி, கருப்பண்ணன் என்று வழங்கப்படுபவர். பைரவரின் அம்சமாக வணங்கப்படுபவர். வலக்கரத்தில் கத்தி அல்லது அரிவாளும் இடக்கரத்தில் தண்டம் அல்லது கதையும் கொண்டிருப்பார். முறுக்கு மீசையும் சடாமுடியும் உடையவர். கிராமிய காப்புக் கடவுளான இவர் குதிரை வாகனம் உடையவர். உருளைக்குடி ஊரில் நீர்ப்பாய்ச்சி குடும்பத்திற்குக் குலதெய்வமாக விளங்கக் கூடியவர் ‘கட்டக்கருப்பன் சாமி’. நீர்ப்பாய்ச்சி என்ற பரம்பரைப் பெயரைக் காப்பாற்றியவரும் இந்த ‘கருப்பன் சாமி’ தான். கண்மாய்க்கு மட்டும் காவல் காப்பவர் கிடையாது. கண்மாயிலுள்ள அனைத்து உயிர்களையும் காவல் காத்து வருபவர் இந்த நீர்ப்பாய்ச்சி கட்டக்கருப்பன் சாமி. தன் உயிரைக்கொடுத்து கண்மாய் மடையில் ஏற்பட்ட அடைப்பை சரிசெய்ததாலும் கண்மாயிலுள்ள அனைத்து உயிர்களையும் பயிர்களையும் காப்பாற்றியதாலும் இவரைக் கண்மாயிக்கு காவல் தெய்வமாக வைத்து வழிபடுகின்றனர். கருப்பன் சாமிக்கு ஆண்டுக்கு ஒருமுறை பொங்கல் வைத்து வழிபடுகின்றன.

**கள்ளன் சாமி வழிபாடு**

நாட்டுப்புற மக்களிடையே சாமியின் தோற்றத்திற்குப் பல்வேறு கதை உண்டு. அந்த வகையில் கள்ளன் எனும் சாமியும் தவறு இழைக்காமல் தண்டிக்கப்பட்ட ஒருவராகக் கதை கூறப்படுகின்றது. மக்கள் தன்பால் செய்த தவறுக்கும், அதனால் ஏற்படும் அச்சத்தின் காரணமாக இறந்தவர்களை வழிபடத் தொடங்கியதாகச் சூல் புதினம் பதிவுசெய்துள்ள கருத்து நாட்டுப்புற கதைகளை ஒத்ததாகக் காணப்படுகிறது. சூல் புதினத்தில், “தெரியாமல் பன்னிட்டோம் சாமி, நான் சாமி இல்லடா, பேய்டா. நான் பேய்டா. ஒங்கள கருவறுக்க வந்த கள்ளன் பேய்டா, எங்களுக்குச் சாமியும் ஒன்று தான் பேய்யும் ஒன்றுதான். இரண்டுக்கும் பயப்படுவோம், இரண்டையும் வணங்குவோம்” (சோ.தர்மன், 2016, ப.71) என்று மக்கள் கூறினர். கள்ளன், தனக்கும் சிலை வைத்து ‘கள்ளன் சாமி’ என்ற பெயரில் கோவில் கட்டி வழிபடக் கூறினான். உளிக் கருப்பன் திருவிழா (கொட) நடத்தும் போது தனக்கும் சேர்த்து நடத்தும் படிகூறினான். கள்ளனுக்குப் பயந்த ஊர் மக்கள் கள்ளனைத் தெய்வமாக வழிப்பட்டு வருகின்றனர். கள்ளன் எந்தவிதத் தவறும் செய்யாத போதிலும் மக்கள் தவறாகப் புரிந்துகொண்டதால் கள்ளனாகிப் பின்பு சாமியாகிப்போனான். உருளைக்குடி மக்கள் கள்ளனுக்குக் கோவில் கட்டி தலைமுறை தலைமுறையாக தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

**கொடிக்காப்பிள்ளைக் கோவில்**

உருளைக்குடிக் கண்மாயில் வெற்றிலைப் பயிரிடும் பிள்ளைமாரைக் 'கொடிக்கால் பிள்ளை' என்று காரணம் சொல்லி அழைப்பர். இவர்களின் பரம்பரைத் தொழில் வெற்றிலைத் தொழில். பிள்ளைமார் குடும்பத்தைச் சேர்ந்த 'மகாலிங்கம் பிள்ளை' ஏதிர்பாராத விதத்தில் கிணற்றில் விழுந்து இறந்தார். அவருடைய ஆன்மா கிணற்றிக்குள் இருப்பதாக எண்ணி அவரை வெற்றிலைக் காவல் தெய்வமாக வழிபடுகின்றன. அவருக்கு வட்டவடிவில் கோவில் இருப்பதால் கொடிக்காப்பிள்ளை கோவில் என்றும், பெரிய பிள்ளை கோவில் என்று அழைத்தனர். கொடுக்கால் பிள்ளை கோவிலில் நடவு, அறுவடை காலங்களில் பொங்கல் வைத்து வழிபடுவர். இக்காவல் தெய்வம் வயல்களை நாசம் செய்யும் எலி, பூச்சி ஆகியவற்றைக் கொல்ல ஆந்தை, கூகையா மாறி வயலை காவல் காக்கும் சமியாக வலம் வருகின்றது.

**குரவன் சாமி வழிபாடு**

உருளைக்குடி கண்மாயில் எப்போதும் தண்ணீர் நிறைந்து காணப்படும். தண்ணீர் குறைவாக இருக்கும் போதுதான் மக்கள் மீன் பிடிப்பர். ஒருமுறை ஊர் மக்கள் மீன் பிடித்துக்கொண்டு இருக்கும் போது தூங்கன் குரவை மீனை பிடித்து முழுங்குவது போல் விளையாட்டுக் காட்டி விளையாடி கொண்டு இருந்தான். ஆனால் விளையாட்டு வினையாக மாறி குரவை மீன் அவன் தொண்டைக்குள் மாட்டுக்கொண்டது. மூச்சு விட முடியாமல் மீன் போல் துடிதுடித்து இறந்துவிடுகிறான். தூங்கன் இறந்து மூன்று ஆண்டுகளாகக் காரணமின்றிக் கண்மாயில் மீன்கள் இறந்துமிதந்தன. இது தெய்வ குற்றமாக இருக்கும் என மக்கள் நினைத்து அய்யனாரிடம் வேண்டி கெண்டனர். பூசாரி மீது அய்யனார் சாமி வந்து, "இதற்குக் காரணம் தூங்கன் அவனைச் சாமியாக வழிபடக் கூறுகிறான். என்னோட அதிகாரம் எல்லாம் தரையில் தான் அவன் தண்ணீர்குள்ளே அட்டகாசம் செய்யிரான். மச்ச அவதாரம் எடுத்து தண்ணீர்க்குள்ள போய் ஒளிஞ்சிக்கிறான். மீனோட மீனா கலந்து அட்டகாசம் பண்றான். அதனால அவனை அடையாளம் காணமுடியவில்லை. தண்ணீரை வத்த செய்தால் கருவா மாறி கரம்ப மண்ணுக்குள்ள கலந்து போயிறான். அப்படிப் போனால் மீன் முட்ட மண்ணோட கலந்து எத்தனை வருசம் ஆனாலும் அப்படியே அழியாமல் இருக்கும்" (தர்மன்.சோ., 2016, பக்.81.84) என்றார். எனவே மக்கள் தூங்கனுக்குப் பயந்து அவனையும் சாமியாக வழிபட்டனர். அய்யனார் கோவலுக்கு எதிரே உடைமரத்தடியில் உள்ள கல்லை 'குரவைச் சாமி' என்று பெயர்வைத்து வழிபட்டத்தன் காரணமாகக் கண்மாயில் மீன்கள் தற்போது இறப்பதில்லை என நம்பினர். இவ்வாறு தலைமுறைகள் மாறி குரவைச் சாமி என்ற பெயர் 'குரவன் சாமி'யாக மாறியுள்ளது.

**உளிக் கருப்பன், மாதாயி, குழந்தை தெய்வம்**

உருளைக்குடி ஊரின் நுழைவாயில் உளிக்கருப்பன் கோயிலுள்ளது. இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை உளிக்கருப்பன் திருவிழா நடைபெறும். திருவிழாவிற்கு எட்டயபுரம் மன்னரும் வந்து வழிபடுவர். இன்றும் அரண்மனை பிரதிநிதி வந்து விபூதி பெற்றுச் செல்லும் சடங்கு நடத்தப்படுகிறது எனச் சூல் புதினத்தில் பதியப்பட்டுள்ளது. கோவில் அமைப்பு, நான்கு பக்கமும் நான்கு கல் தூண்களும் கூம்பு வடிவக் கூரையைத் தாங்கிய படியிருக்கும். சிலை என்று எதுவும் கிடையாது, உளி வடிவத்தில்

செதுக்கப்பட்ட ஒரு கல் நட்டு வைத்திருப்பர். கோவில் இடது புறம் சுமைதாங்கிக் கல்லும் குழந்தை வேண்டிக் கட்டிய தொட்டில் இருக்கும். கோவிலின் வலது புறம் பால்மரம். அதில் ஆடு, மாடு ஈன்ற கன்றின் நஞ்சுக்கொடி கட்டிதொங்கவிடுவர். அதற்குக் காரணம் கன்றுக்கு எந்த நோய், நொடி வராமல் இருக்கவும் அதிகக் கன்று கிடைக்க வேண்டும் என வேண்டி கட்டிதொங்கவிடுவர்.

இறந்தவர்களை தெய்வமாக வழிபடுவதற்கான தக்க சான்றாக உளிக்கருப்பன் கோயில் காணப்படுகின்றது. அவர்களுக்க நடந்த நிகழ்வினை வெளிப்படுத்தும் விதமாகக் கோயில் அமைக்கப்பட்டு உள்ளது. கருப்பன் மாதவியைக் கர்ப்பமாக்கிவிட்டு குழந்தைக்குத் தான் காரணமில்லை என்று கூறி அவளை ஒதிங்கிவிட்டான். இதனால் மாதாயி அவமானத்தின் மூலம் குழந்தையைச் சுமந்து திரிந்தாள். நிறைமாத கர்பிணியான மாதாயி உளியால் கருப்பன் கழுத்தை வெட்டி, தன் வயிற்றையும் கிழித்துக் குழந்தையை எடுத்து அவன் மீது வீசி எரிந்து, அந்த இடத்திலே அவளும் இறந்துவிடுகிறாள். பின் நாளில் அவர்கள் மூவரையும் ஊர் மக்கள் தெய்வமாக வழிபடுகிறனர். உருளைக்குடி ஊரில் உளிக்கருப்பன் கோவில் அவமானத்தின் பலனாகக் கருப்பன் நிற்கிறான். மாதாயி தெய்வம் குழந்தை வரம், திருமணம் நடக்காத பெண்கள் தன்னைப் போல் ஏமாற்றப் படகூடாது என்பதால் கேட்டவுடன் தாலி வரம் தருகிறாள். பெண்களின் கர்ப்பத்திற்கு மட்டுமின்றிக் கால்நடைகள் கர்ப்பத்திற்கும் காவல் இருக்கிறாள். மாதாயின் குழந்தையைக் காண தினமும் பக்தர்கள் வந்து வழிபட்டு, பலியிட்டு செல்கின்றனர்.

**இருளப்பன் சாமி வழிபாடு**

ஆவிகளை விரட்டும் சக்தி வாய்ந்த சாமி இருளப்பன் அருங்குளத்தில் உள்ளது. இருளப்பன் சாமி அவ்வுரில் சுயம்பாகத் தோன்றியது. 'சுயம்பு' என்பது பாதாளத்தைத் தாண்டியும் போகும். அசைக்க முடியாது. பாதியால் உடைத்தாலோ மீண்டும் மீண்டும் வளரும். உடைத்த பாகத்தை எடுத்தால் உருவம் மட்டும் வரும் சக்தி வராது, சுயம்பையும் சக்தியையும் பிரிக்கமுடியாது. வேப்பமரத்தின் கீழ் நான்கு பக்கமும் கல்தூண்களும் கூரை வேய்ந்த பந்தலுக்கடியில் கையில் அரிவாளுடன் இருளப்பசாமி காணப்படுகிறார். அருகில் பொங்கல் வைப்பதற்குக் கற்களும் மணிகள் கோர்த்த பழைய கம்பும் உள்ளது. துருப்பிடித்த இரண்டு அரிவாள்கள் சாமியின் காலுக்கடியில் இருக்கும். இடுப்பில் வெள்ளை அங்கவஸ்திரம் சுற்றி இருளப்பசாமி அருங்குளம் ஊரின் காவல் தெய்வம் காணப்படுகிறார்.

**இருளப்பன் பிடிமண்**

பிடிமண் சக்தி வாய்ந்ததாக மக்கள் நம்பினர். மண்ணையும் வானையும் பார்த்து விவசாயம் செய்தவன் விவசாயி. விவசாயத்தினை அதாரமாகக் கொண்டு வாழும் கிராம மக்களிடையே மண்ணிற்கான முக்கியத்தும் எத்தகையது என்பதைச் சூல் புதினம் விளக்குகிறது. காளியம்மாள் சாமியாடி, "ஒரு ஆளோட காலடி மண்ண வச்சு என்ன வேணும்னாலும் செய்யலாம், அந்த ஆளையே அவனோட காலடி மண்ண வச்சு பொம்மையாவும் ஆக்கியிறலாம், பொணமாவும் ஆக்கியிறலாம். புலம்பித் திரியும் படியாவும் ஆக்கியிறலாம். பிடிமண் போயிருச்சுனா இங்க இருக்கப் போறது வெறும் கல்லுதான், சக்தி இருக்காது" (தர்மன்.சோ., 2016, ப.27) என்றாள். ஆண்டுக்கு ஒருமுறை வரும்

சிவராத்திரி அன்று அருங்குளம் மக்கள் அரண்மனைக்குச் சென்று இருளப்பனை வழிபடுவர்.

**தூள்மாவுச் சாமி வழிபாடு**

மக்களின் வாழ்வு பெரிதும் மழையையே நம்பி இருக்கிறது. உணவுக்கு ஆதாரமான பயிர்களை விளைவிப்பதில் மழை முக்கியப் பங்குவகிக்கிறது. உயிர்கள் மழையை நம்பி இருக்கும் இன்றியமையாத நிலையை விளக்கவே வள்ளுவர் வான் சிறப்பு என்னும் அதிகாரத்தைத் தோற்றுவித்தார் என்றால் அதுமிகையாகாது.

**“நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வானின்று அமையாது ஒழுக்க” (குறள், 20)**

என்னும் குறள் இதற்குச் சான்றாக அமைகிறது. எனவே மக்கள் மழையைப் பழங்காலந்தொட்டு வழிபட்டு வந்திருப்பதில் ஆச்சரியமில்லை.

சூல் புதினத்தில் ஊர் மக்களின் அனுமதி பெற்று மழையை வழி அனுப்பு சடங்கு நடைபெறும். மழைக் காலங்களில் கண்மாய் நிறைந்து, காடுகளில் விதைப்பு முடிந்து, வயல்களில் நெல் நடவு ஆரம்பிக்கும் முன் மழை வந்தால், மழையை வழி அனுப்பும் சடங்கு நடத்தப்படும். மக்களுக்கு அறிவித்தப்படி வெள்ளிக் கிழமையில் கொடி ஏற்றி ஊர் முழுவதும் தோரணம் கட்டுவர். அடுத்த வெள்ளிக்கிழமைக்கு ‘தூள்மாவுச் சாமி’க்குப் பொங்கல் வைத்து வழிபடுவர். தெரு இருபக்கத்திலும் வைக்கோல் பின்னி அதில் வேப்பக் குழையைக்கட்டி தொங்கவிடுவர். இதற்குக் காரணம் வெளியூர் மக்களுக்குத் திருவிழா நடைபெறப்போகிறது என்பதை வெளிப்படுத்தும் விதமாகக் கட்டித்தொங்கவிடுவர். வெளியூர் மக்களும் தெருவுக்குள் வரும்போது செருப்பைக் கழற்றிவிட்டுதான் வரவேண்டும். இதைப்போலத் திருவிழாக் காலங்களில் உள்ளூர் சாமிக்கும் வெளியூரில் இருக்கும் சாமிக்கும் தொடர்பு ஏற்படாமல் இருக்க, முக்கியமான தெருக்கள் முழுவதும் வேப்பிலையைக் கட்டித்தொங்கவிடுவர். வேப்பிலைக்குக் கட்டுப்பட்டுச் சாமி அடுத்த ஊருக்குச் செல்லாமல் இருக்கும்.

மழையை வழி அனுப்புதற்கான சடங்கு முறையில் கொட்டாங்குச்சி அளவில் சிறு ஓலையில் அரிசி மாவை நடுவில் வைத்திருப்பர். பெண்கள் அதைச் சுற்றி வட்டமாக நிற்பர். கொட்டுச் சத்தமும் குலவைச் சத்தமும் ஒலிக்க முதலில் எந்த இரு பெண்களுக்குச் சாமிவருகிறதோ அவர்கள் அங்கு இருக்கும் மாவை கையில் அள்ளி சுற்றி இருப்பவர்களுக்குக் கொடுத்து இன்னும் வேணுமா, இன்னும் வேணுமா என்று கேட்பர். மாவை வாங்குபவர் போதும் சாமி, போதும் சாமி எனக் கூறவேண்டும். ‘வேண்டும்’ என்று கூறாமல் நீர்ப்பாச்சி பார்த்துக்கொள்வார். இரு பெண்களும் தனியாக ஓர் இடத்திற்குச்சென்று மாவை காற்றில் பறக்கவிடுவர். அவர்களைத் தொடந்து அனைவரும் மாவை காற்றில் பறக்கவிடுவர். அப்போது மழை கொஞ்சம் கொஞ்சமாக விடைபெற்றுச் செல்லும்போது பெண்கள் அனைவரும் சேர்ந்து குலவைபோடுவர். இவ்வாறு மழையை வழியனுப்பும் சடங்கின் வழிபாட்டு முறையை உருளைக்குடி மக்கள் நம்பினர் என்பதைச் சூல் புதினத்தில் ஆசிரியப் பதிவுசெய்துள்ளார்.

**முடிவுரை**

சோ.தர்மனின் சூல் புதினத்தில் ஒவ்வொரு நாட்டுப்புறத் தெய்வங்களுக்குப் பின்பு ஒரு அறம்

பின்பற்றப்படுகிறது.

கரிசல் மக்களும் நாட்டுப்புறத் தெய்வங்களின் மீது சிறந்த பற்றுக்கொண்டுள்ளனர். தமிழிப் புனைகதைப் பரப்பில் சூல் புதினத்தின் வழியாகக் கரிசல் மண்ணின் உயிர்ப்போடு உள்ள தெய்வங்கள் பற்றியும் அந்தத் தெய்வங்கள் மக்களோடு கொண்டுள்ள பண்பாட்டு உறவுகள் பற்றியும் இதன் மூலம் அறியமுடிகிறது.

இறைவனுக்குச் செய்துவரும் வழிபாட்டு சடங்குமுறைகள் காரணகாரிய அடிப்படையில் பழக்கவழக்கங்களாகவும் நம்பிக்கையாகவும் உருவெடுத்துள்ளது. மேலும் இவ்வகையில் பண்டைக்காலத்தில் மக்கள் எவ்வகையான வழிபாட்டு முறைகளைக் கையாண்டனர் என்பதை இதன் மூலம் அறியப்படுகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. கழகத் தமிழகராதி, (1976) கழக வெளியீடு, முதற்பதிப்பு, சிவகங்கை.
2. கனகராசு,ப., (2004) அண்ணன்மார் சாமி கதை வடிவங்களும் வழிபாடுகளும், தி பார்க்கர் வெளியீடு, முதற்பதிப்பு, சென்னை.
3. கைலாசபதி,க., (1978) பண்டைத் தமிழர் வாழ்க்கையும் வழிபாடும், மக்கள் வெளியீடு, இரண்டாம் பதிப்பு, சென்னை.
4. சற்குணவதி, (2010) தமிழக நாட்டுப்புறவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை
5. தர்மன்.சோ., (2016) சூல், அடையாளம் பதிப்பகம், சென்னை.
6. பெருமாள்.எஸ்.ஏ, (2011) கடவுள் பிறந்த கதை, பாரதி புத்தகாலயம், சென்னை.